செவிச்செல்வம்

# "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

CHAPTER 8 - CHALLENGES

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# REGULATORY AND OPERATIONAL CHALLENGES

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

CHAPTER - 8

EPISODE - 39

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- பல சமுதாய வானொலி நிலையங்களில் தொலைநோக்குப் பார்வை மற்றும் குறிக்கோள் அறிக்கை சரியாக இருப்பதில்லை.
- சமுதாய வானொலி நிலையங்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தை அரசு ஏற்பாடு செய்யும்போது சமுதாய வானொலியின் அலுவலகப் பணியாளர்களுக்கு மிக குறைந்த நேரத்தையே ஒதுக்குகிறது
- விளம்பரம் மற்றும் காட்சி விளம்பர இயக்குனரகம் சமுதாய வானொலி நிலையங்களுக்கான வரிசைப் பட்டியலில் சேர்த்து இருப்பினும் 253 நிலையங்களில் இன்னமும் 150 நிலையங்கள் பட்டியலில் சேர்க்க வேண்டி இருக்கிறது.
- ஒரு சில மாநில அரசுகளை தவிர மற்ற மாநில அரசுகள் சமுதாய வானொலியின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதில்லை. அரசு எந்த ஒரு நிதி உதவியும் இவர்களுக்கு கிடைப்பதில்லை

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் சமுதாய வானொலியினை சாதாரண கொள்கை பரப்பும் அமைப்பாக எண்ணுகிறது.
- மதிப்புக் கூட்டு சேவைகளை சமுதாய வானொலியில் அனுமதிப்பதில்லை. அதாவது இணையவழி நேரலை ஒலிபரப்பு என்பது சட்டத்திற்குப் புறம்பானதாக கருதப்படுகிறது.
- தனியாரால் வழங்கப்படும் நிகழ்ச்சிகளை அனுமதிக்கப்படுவதில்லை.
- உள்ளூர் வியாபாரிகள் மற்றும் வியாபார நிறுவனங்கள் எந்தவித நிகழ்ச்சிக்கும் ஆதரவு கொடுக்க இயலவில்லை என்றாலும் நிகழ்ச்சிகளில் சிறு சிறு விளம்பரங்கள் மட்டுமே இடம் பெறமுடிகின்றது.

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- சமுதாய வானொலி நிலையங்கள் தங்களுக்கான வங்கி கணக்கு பெற்றிருக்க வேண்டும்.
- அவர்களின் நிகழ்ச்சி, ஒலிபரப்பு அட்டவணை மற்றும் வரவு செலவு கணக்குகளை மத்திய அரசின் தகவல் மற்றும் தொலைதொடர்பு அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்
- 2012இல் சமுதாய வானொலியின் ஆதார நிதி 100 கோடியாக அறிவிக்கப்பட்டது. ஐந்து வருடங்களுக்குப் பிறகு 90 சதவீதம் நிதி பயன்படுத்தப்படாமல் இருந்தது
- அரசு, மானியத்தை 75% புதிய சமுதாய வானொலிக்கும் 90% வடகிழக்கு மாநிலங்களில் உள்ள சமுதாய வானொலிக்கும் 2017 ல் உயர்த்தியது.

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- சமுதாய வானொலியினை நிறுவுவது அந்த நிறுவனத்தின் தரநிலையை மேம்படுத்தவும் தேசிய தர மதிப்பீட்டு அங்கீகாரம் அமைப்பின் புள்ளிகளை பெறுவதற்குமாக இருக்கிறது.
- பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் ஆரம்ப காலகட்டத்தில் அளிக்கப்பட்ட நிதி நிறுத்தப்பட்டதால் சில சமுதாய வானொலி நிலையங்கள் செயல்படுத்தப்படவில்லை
- அரசுத் துறைகள் குறிப்பாக வேளாண் அமைச்சகத்திடமிருந்து போதுமான ஒத்துழைப்பு இல்லாமல் இருக்கிறது
- 50 வாட் ஒலிரப்பு உபகரணத்திற்கு பதிலாக 250 வாட் சாதனம் வழங்கப்படுகிறது. ஆனால் கடந்த 15 வருடங்களாக இந்த வாய்ப்பினை ஒரு நிலையும் கூட பெற்றதாக அடையாளம் காணப்படவில்லை

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- உபகரணங்களுக்கான வரி குறைப்பு கொடுக்கப்படவில்லை
- சமுதாய வானொலிக்கான தரமான மற்றும் நம்பகமான ஒலிபரப்பு சாதனங்கள் நம் நாட்டில் தயாரிக்கப்படுவதில்லை.
- பாரத் மின் நிறுவனம் சமூக பொறுப்பின் செயல்பாடாக ஆரம்பத்தில் ஒலிபரப்பு சாதனம் தயாரித்து அதற்கு வாழ்நாள் உத்தரவாதம் கொடுத்தது.
- சமுதாய வானொலிக்கு அதிக அளவு அதிகாரம் கொடுக்கும் ஒரு திட்டம் 2016 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது ஆனால் அதற்கான தொடக்கம் இன்னமும் செயல்படுத்தப்படவில்லை
- பல்வேறு இடங்களில் ஒலிபரப்பு சாதனத்தின் அமைவிடம் அதனைச் சார்ந்த சமூகத்தினை எளிதில் சென்று அடையாத நிலையில் உள்ளது.

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- சொந்த கட்டிடங்களிலேயே ஒலிபரப்பு சாதனம் மற்றும் வானொலி கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது
- 15 கிலோமீட்டர் பரப்பளவில் ஒலிபரப்பு சென்று சேரக்கூடிய அளவில் இடத்தினை தேர்வு செய்ய நிதி அனுமதிக்கிறது. சில நிலையங்கள் அருகில் உள்ள குன்றின் மேல் நிறுவப்பட்டுள்ளது. இவ்வகை நிலையங்கள் சமுதாயத்தை நன்கு சென்றடைகிறது மற்றும் நிதி ஆதாரமும் பெருகிறது. சில தவறான அமைவிடத்தினால் சில நகரங்களில் ஐந்து கிலோமீட்டர் பரப்பளவிற்கு கூட ஒலிபரப்பு சென்று அடைவதில்லை.
- சமுதாய வானொலி நிலையத்தை தொடங்குவதற்கான அனுமதிக் கடிதம் மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்திலிருந்து விரைவாக பெற முடிகிறது.

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- அலைவரிசை ஒதுக்கீடு தொலைத்தொடர்பு அமைச்சகத்திடமிருந்து கிடைக்க காலதாமதம் ஏற்படுகிறது
- வியாபார நோக்கத்துடன் இயங்கும் வானொலி நிலையங்களின் அலை குறுக்கீட்டினால் ஏற்படும் பிரச்சினைகள்
- சமுதாய வானொலி நிலையங்களில் உள்ள கடைநிலை ஊழியர்களுக்கு கொள்கை முடிவுகளை வெளிப்படுத்துவதில்லை. ஆனால் அனைத்து கூட்டங்களும் அவர்களுக்காகவே நடத்தப்படுகிறன.
- சமுதாய வானொலி மன்றம், சமுதாய வானொலி கழகம் மற்றும் சமுதாய வானொலி கூட்டமைப்பு ஆகிய இம்மூன்று கழகங்களும் ஒன்றிணைந்து வானொலிக்கான உரிமத்தை வழங்குகிறது.

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- Ford அறக்கட்டளையின் நிதியால் ஆசிய காமன்வெல்த் கல்வி ஊடக மையம் சமுதாய வானொலி மேம்பாட்டு மையத்தை இயக்கியது.
- இதை மத்திய அரசின் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சகம் செயல்படுத்தி வந்தது. ஆனால் இது தலைமை மாற்றத்திற்கு பிறகு செயல்படாத அமைப்பாக மாறியது.
- சமுதாய வானொலி மேம்பாட்டு மையம் ஒற்றைச்சாளர முறைக்கு முன்னோடியாக கருதப்படுகிறது.
- சமுதாய வானொலியினை அமைப்பதற்கான இறுதி நிலையை எட்டுவதற்கு ஏறத்தாழ ஆறு படிநிலைகளைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது.
- சமுதாய வானொலிக்கான வழிகாட்டுதலில் குறிப்பிட்டபடி எந்த ஒரு நிலையத்திற்கும் 90 நாட்களில் உரிமம் வழங்க வேண்டும் . ஆனால் ஒரு நிலையத்தால் கூட இந்த குறிப்பிட்ட கால அளவில் உரிமம் பெற இயலவில்லை.

# சமுதாய வானொலியில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் இயக்குவதிலும் உள்ள சவால்கள்

- சில சமுதாய வானொலி நிலையங்கள் வியாபார நோக்கில், திரையிசைப் பாடல்களை ஒலிபரப்பி அவர்களின் உரிமத்தை தவறாக பயன்படுத்துகின்றனர்.
- வானொலி ஒலிபரப்பு சில சமயங்களில் இயற்கை சீற்றங்கள், புயல் , வெள்ளம், பூகம்பம் போன்றவைகளால் தடைபடலாம் அந்த நேரங்களில் ஆண்டனா அல்லது ஒலிபரப்பு கோபுரம் செயலிழக்கலாம் அல்லது அழிந்தும் போகலாம்.
- புதுப்பிப்பதற்கு நிதி பிரச்சனையை சந்திக்க நேரிடும் பொழுது அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கக்கூடிய நிதி உதவிகளும் தாமதமாகிறது. தாமதமின்றி கிடைத்தால் உதவியாக இருக்கும்